

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஏப்ரல் 18, 2019 | புரட்சி 18 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00


## மோடியின் 10 சதவீத இட ஒதுக்கீடு ஒரு ஏமாற்று வித்தை

# 445 உயர்கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டின் நிலை என்ன?

திறந்த போட்டியில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள முன்னேறிய ஜாதியினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீட்டை மோடி ஆட்சி அவசர அவசரமாய் கொண்டு வந்தது. தேர்தலில் வாக்கு அரசியல் நடவடிக்கையே தவிர, உண்மையாக அந்த 10 சதவீத 'ஏழைகளுக்கு' பயன் கிடைக்க வேண்டும் என்பது அல்ல. இது குறித்து இந்து ஆங்கில நாளேட்டில் (ஏப். 10, 2019) ஒரு ஆய்வுக் கட்டுரை வெளி வந்துள்ளது. ஏற்கனவே உயர் கல்வியில் மேற்குறிப்பிட்ட பொருளாதார நலிந்த பிரிவினர் 10 சதவீதத்துக்கு கூடுதலாகவே இடம் பெற்றிருக்கின்றனர் என்பதை புள்ளி விவரங்களுடன் நிறுவியுள்ளது அக்கட்டுரை. கட்டுரையில் இடம் பெற்றுள்ள கருத்துகள்:

மத்திய மனித வளத் துறை அமைச்சகம் 2016ஆம் ஆண்டில் இந்தியாவில் உயர்கல்வி நிறுவனங்களை தர வரிசைப்படுத்தும் ஒரு முறையை 2016ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. அதன்படி தர வரிசையை முறைப்படுத்தும் தேசிய நிறுவனம் ஒன்று உருவாக்கப் பட்டது. (National Institute Ranking Frame Work-NIRF) இந்த நிறுவனம் 2018இல் 445 உயர்கல்வி நிறுவனங்களை தர வரிசைப்படி பட்டியலிட்டுள்ளது. இந்த தர வரிசை ஆய்வில் பொருளாதார அடிப்படையில் பின் தங்கியவர்கள் சமூக ரீதியான நெருக்கடிக் குள்ளான பட்டியல் பழங்குடிப் பிரிவு, பிற்படுத்தப்பட்டோர் பிரிவு மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. 2016-17இல் 445 உயர்கல்வி நிறுவனங்களில் 28 சதவீதம் மாணவர்ககள் (4.55 இலட்சம்) பொருளாதார ரீதியாக பின் தங்கியவர்கள் என்றும், தனியார் கல்வி நிறுவனங்களில் இப்பிரிவைச் சார்ந்தவர்கள் 30 சதவீதம் பேர் படிக்கிறார்கள் என்றும் அந்த ஆய்வு கூறுகிறது. உயர்கல்வி நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது தர வரிசைப்படுத்தப்பட்ட 445 உயர்கல்வி நிறுவனங்களில் 66 சதவீத நிறுவனங்களில் பொருளாதார அடிப்படையில் பின் தங்கியவர்கள் 10 சதவீதத்துக்குக் கூடுதலாகவே இருக்கின்றனர். அரசு உயர்கல்வி நிறுவனங்களில் இந்த நிலை என்றால், 68 சதவீத தனியார் உயர்கல்வி நிறுவனங்களிலும் பொருளாதார அடிப்படையில் பின் தங்கியப் பிரிவினர் 10 சதவீதத்துக்கு அதிகமாகவே உள்ளனர். இது கூட ஆண்டுக்கு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ. 5.5 இலட்சம் வரை வருமானம் வரக்கூடியவர்கள் என்ற அடிப்படையில் எடுக்கப்பட்ட கணக்கீடு. இப்போது பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்திருக்கும் பொருளாதார வரம்பு ரூ.8 இலட்சமாகும். இந்த அடிப்படையில் இத்தகைய பிரிவினரை கணக்கிட்டால் மாணவர் எண்ணிக்கை மேலும் அதிகமாகி விடும்.

அதே நேரத்தில் பட்டியல் இனப் பிரிவினர் - பழங்குடியினர் - பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் - அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடங்களைவிட மிகக் குறைந்த அளவிலேயே இடம் பெற்றிருக் கின்றனர். 445 உயர்கல்வி நிறுவனங்களில் (அரசு மற்றும் தனியார் நிறுவனங்களையும் சேர்த்து) சமூகக் கல்வி ரீதியான இடஒதுக்கீட்டுப் பிரிவினர் - அதாவது பட்டியல் இனப் பிரிவு, பழங்குடிப் பிரிவு, இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவு அனைத்தையும் சேர்த்து 38 சதவீதம் பேர் இடம் பெற்றுள்ளனர். நியாயமாக இவர்களுக்கான இடஒதுக்கீடு 49.5 சதவீதமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் 11.5 சதவீதம் குறைவாகவே 38 சதவீத மாணவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தனியார் நடத்தும் உயர்கல்வி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலின பழங்குடி பிரிவினருக்கு 30 சதவீத இடங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. (அதாவது தரப்பட வேண்டியதைவிட 19.5 சதவீதம் குறைவு) இதே 30 சதவீத அளவுக்கு பொருளாதார அடிப்படையில் பின்தங்கியப் பிரிவினரும் சம அளவில் இடம் பெற்றிருக்கிறார்கள். பட்டியல் - பழங்குடி மற்றும் பிற்படுத் தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள் மக்கள் தொகை அடிப்படையில் 70 சதவீதம் இருந்தாலும் (தேசிய மாதிரி கணக்கெடுப்பு 2011-2012இன்படி 70 சதவீதம்) உயர் கல்வி நிறுவனங்களில் அவர்களுக்கான பிரதிநிதித்துவம் மிக மிகக் குறைவு. தர வரிசைப்படுத்தப்பட்ட 445 உயர்கல்வி நிறுவனங்களில் உள்ள நிலை இது. தர வரிசையில் இடம் பெறாத கல்வி நிறுவனங்களில் பொருளாதாரத்தில் பின் தங்கியோர் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கும்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட் டோருக்கு உரிய ஒதுக்கீடுகள்; உயர்கல்வி நிறுவனங்களில் முழுமையாக நிரப்பப்படவில்லை; மோடி ஆட்சி அறிமுகப்படுத்தியுள்ள 10 சதவீத இட ஒதுக்கீட்டுப் பிரிவினர் பல மடங்கு கூடுதலாகவே இடம் பிடித்துள்ளனர்.

இந்த நிலையில் 10 சதவீதம் பொருளாதார ரீதியில் பின் தங்கியவர் களுக்கு இடஒதுக்கீடு கொண்டு வந்து சட்டத்திருத்தம் செய்வது என்பதன் நோக்கம் இட ஒதுக்கீட்டின் அடிப்படையைக் குலைத்துவிட வேண்டும் என்பதைத் தவிர வேறு காரணம் இருக்க முடியாது. பார்ப்பன உயர் ஜாதியினரைத் திருப்திப்படுத்தி அவர்கள் ஓட்டுகளைப் பெறுவதும் இதன் நோக்கம்.

### 'பிரண்ட் லைன்' பத்திரிகை ஆய்வு

## உ.பி. பீகாரில் பா.ஜ.க.வுக்கு கடும் பின்னடைவு

உ.பி. பீகாரில் பா.ஜ.க. இந்தத் தேர்தலில் கடும் பின்னடைவைச் சந்திக்கும் என்று 'பிரண்ட் லைன்' இதழ் (ஏப். 26, 2019) – அதன் செய்தியாளர்கள் தந்துள்ள தகவல் அடிப்படையில் ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு தேர்தலில் உ.பி.யில் பா.ஜ.க. 71 இடங்களைப் பிடித்திருந்தது. அதற்கு அடிப்படைக் காரணம் 2013இல் நடந்த முசாஃபர் நகர் கலவரம். மதக் கலவரத்தில் முஸ்லிம்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டு அவர்கள் உடைமைகள் அழிக்கப் பட்டன. 60 பேர் உயிர்ப் பலியானார்கள். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். இந்து – இஸ்லாமியர் என்ற அடிப்படையில் வெறுப்பு அரசியலை பாஜ.க.வும் – ஆர்.எஸ்.எஸ்.சும் திட்டமிட்டு உருவாக்கியது. எனவே இந்தப் பகுதியில் பெரும்பாலான இடங்களை தேர்தலில் பாஜ.க. ஜாதி மற்றும் கட்சிகளைக் கடந்த அறுவடை செய்ய முடிந்தது. இப்போது அந்த நிலை மாறி விட்டது. 2014இல் 16 இடங்களை வென்ற பாஜ.க. மேற்கு உ.பி. பகுதியில் ஏப்.11, 17 தேதிகளில் இப்போது முதல் கட்ட வாக்குப் பதிவைச் சந்திக்க இருக்கிறது. (ஏப். 11இல் முதல் கட்ட வாக்குப் பதிவு முடிந்து விட்டது. நிலைமை பா.ஜ.க.வுக்கு சாதகமாக இல்லை என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன) இப்போது வழக்கம்போல தலித், ஜாட், யாதவர்கள் மீண்டும் தங்கள் ஜாதி அடையாளத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளான இராஷ்டிரிய லோக்தள், பகுஜன் சமாஜ் கட்சி, சமாஜ் வாடி கட்சிக்கே வாக்களிப்பார்கள் என்பது கள ஆய்வில் தெரிகிறது. இந்தக் கட்சிகள் இப்போது கூட்டணி அமைத்து பாஜ.க.வை சந்திப்பதால் பாஜ.க. பின்னடைவை சந்திக்கும் வாய்ப்புகளே அதிகம்.

2018இல் நடந்த உ.பி. இடைத் தேர்தல் முடிவுகளும் இதையே உறுதி செய்திருக்கின்றன. அரசியல் ஆய்வாளர் மேச்சிங் இது பற்றி தெரிவித்துள்ள கருத்து:

'கரும்பு உற்பத்தியாளர் மற்றும் ஜாதி–மதம்' என்ற அடிப்படையே உ.பி.யில் தேர்தல் முடிவுகள் வழக்கமாக தீர்மானிக்கப்படும். இப்போது ஜாதியும், கரும்பு உற்பத்தியாளர்களும் பாஜ.க.வுக்கு எதிராகவே திரும்பியுள்ளனர். 'இந்து – முஸ்லிம்' அணி திரட்சி பெரிய அளவில் இல்லை. பாஜ.க. முஸ்லிம்களை பாகிஸ்தான் ஆதரவாளர்கள் என்று சித்தரித்து இந்து தேசியவாதத்தை முன்னிறுத்தி நடத்தும் பிரச்சாரத்தை ஜாட், யாதவர், தலித் மக்கள் நம்புவதற்கு தயாராக இல்லை என்கிறார், அந்த ஆய்வாளர்.

5 நாடாளுமன்றத் தொகுதிகளைக் கொண்ட உத்தரகாண்ட் மாநிலத்திலிருந்து இராணுவத்துக்கு செல்வோர் எண்ணிக்கை மிக அதிகம். அநேகமாக ஒவ்வொரு வீட்டிலிருந்தும் இராணுவத்தில் இருப்பார்கள். கடந்த முறை 5 தொகுதிகளையும் பாஜ.க. கைப்பற்றியது. இப்போது நிலைமை மாறிப் போயிருக்கிறது என்பதை பாஜ.க. – ஆர்.எஸ்.எஸ்.காரர்களே ஒப்புக் கொள்கிறார்கள். டேராடூன், அரித்வார், தெஹ்ரி பகுதிகளில் மக்களிடம் நடத்திய கள ஆய்வில் பாஜ.க. மீது மக்கள் அதிருப்தியிலே இருப்பது தெரிகிறது என்று கூறுகிறது 'பிரண்ட் லைன்' கட்டுரை.

பீகாரில் பாஜ.க. முன் வைக்கும் 'இந்து தேசியம்' என்பதைவிட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளே முன்னிலையில் நிற்கின்றன என்றும் 'பிரண்ட் லைன்' பத்திரிகை ஆய்வு கூறுகிறது.

# தென்னகத்தை அடக்கும் வடநாடு: அம்பேத்கர் தந்த எச்சரிக்கை

*2019 தேர்தல் களம் வடக்கு, தெற்காகப் பிரிந்து நிற்கிறது. பா.ஜ.க. வடநாட்டுக் கட்சியாகவே செயல்படுகிறது. தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்று திராவிடர் இயக்கத்தின் கருத்தை ராகுல் காந்தியும் ப. சிதம்பரமும் பேசி வருகின்றனர். இந்த ஆபத்தை டாக்டர் அம்பேத்கரே சுட்டிக் காட்டியிருந்தார். அம்பேத்கர் 128ஆவது பிறந்த நாள் நினைவாக அம்பேத்கர் கருத்தை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பதிவு செய்கிறது.*

வட மாநிலங்கள் தென் மாநிலங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆபத்துகள் இந்தியாவில் உருவாகிவிடும் என்பதை முன்கூட்டியே எச்சரித்திருக்கிறார் டாக்டர் அம்பேத்கர் 'மொழி வழி மாநிலங்கள் குறித்த சிந்தனை' என்ற நூலில் அவர் எழுதியிருப்பதாவது :

மாநிலங்களின் பிரிவினைக்கான ஆணையம் மாநிலங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியிருப்பது மட்டுமல்ல, தென்னாடு வடநாடு மோதல்களுக்கும் வழி வகுத்திருக்கிறது. உ.பி, பீகார் என்ற இரண்டு பெரிய மாநிலங்களையும் அப்படியே நீடிக்க அனுமதித்துவிட்டார்கள். இந்த வடமாநிலங்களுக்கு வலிமை சேர்ப்பது போல், மற்றொரு பெரிய மாநிலமாக மத்திய பிரதேசமும், ராஜஸ்தானும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது வடக்கு தெற்கு மோதலை உருவாக்கியிருக்கிறது. வடக்கு இந்தி பேசும் மாநிலங்கள், தெற்கு இந்தி பேசாத மாநிலங்கள், இந்தி பேசும் மாநிலங்களில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை அளவே பெரும்பான்மை மக்களுக்குத் தெரியாது. இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் இந்தி பேசுவோர் எண்ணிக்கை 48 சதவீதம். இந்த உண்மையை உற்று கவனித்து ஆராளிய்ணிந்தால் ஒரு உண்மை நிச்சயமாக புரியும்.

இந்தி பேசும் பெரும்பான்மையோரை, ஒன்றாக்கி விட்டு, தென்னாட்டு மக்களை



சிதறடித்திருக்கிறது, மாநிலங்களைப் பிரிக்கும் ஆணையம். தென்னாடு, வடநாட்டு ஆதிக்கத்தை எப்படி சகித்துக் கொண்டிருக்கும்? இந்தியை ஆட்சி மொழியாக அரசியல் சட்ட வரைவுக்குழு ஏற்றுக்கொண்ட போது காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் நடந்த ரகசியங்களை நான் இப்போது வெளிப்படுத்த விரும்புகிறேன். ஆட்சி மொழி குறித்துப் பேசும் சட்டத்தின் 115ஆவது பிரிவு பற்றிய விவாதம்தான் ஏனைய பிரிவுகள் மீதான விவாதங்களை விட மிகவும் மோதல்களையும், கொந்தளிப்பையும் கொண்டிருந்தது. இந்தப் பிரிவுக்கு எழுந்த சூடு பறந்த எதிர்ப்புகள் வேறு எந்த பிரிவுக்கும் விவாதங்களில் எழவில்லை. மிக நீண்ட விவாதங்களுக்குப் பிறகு நிர்ணய சபையில் இந்திக்கு ஆதரவாக 78 வாக்குகளும், எதிராக 78 வாக்குகளும் கிடைத்தன. முடிச்சை அவிழ்க்க முடியவில்லை. நீண்ட நேரத்துக்குப் பிறகு காங்கிரஸ் கட்சிக்குள் இந்த ஆட்சி மொழி பிரச்சனை ஓட்டுக்கு வந்த போது ஆதரவாக 78 ஓட்டுகளும் எதிராக 77 ஓட்டுகளும் கிடைத்தன. இந்தி ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டது ஒரே ஓட்டு வித்தியாசத்தில் தான். என்னுடையசொந்த நினைவுகளிலிருந்து நான் இந்த உண்மைகளைக் கூறுகிறேன்.

வரைவுக் குழு தலைவர் என்ற முறையில் காங்கிரஸ் கட்சிக்குள் நடந்த விவாதத்தின் போது அந்தக் கட்சியின் கூட்டத்துக்குள் பங்கேற்கும் வாய்ப்பு இயல்பாகவே எனக்குக் கிடைத்தது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே வடக்கு -தெற்கு மோதல் இருந்தது. தென்னாட்டவர்கள் வட நாட்டினரை விரும்பவில்லை என்ற உண்மையையே இது உணர்த்துகிறது.

விரும்பாத இந்த நிலை வெறுக்கும் எல்லைக்கு மாறும். வடநாடு தன்னை ஒருங்கிணைத்துக் கொண்டு, தென்னக அரசியல் மீது எல்லை மீறும் ஆதிக்கம் செலுத்தினால் அது வட நாட்டினர் மீதான வெறுப்பாகவே மாறும். ஒரு மாநிலம் மத்தியில் செல்வாக்கு செலுத்திட வாய்ப்பு தருவது ஆபத்தானது. வடக்கிற்கும் தெற்கிற்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. வடக்கு பிற்போக்கானது தெற்கு முற்போக்கானது. வடக்கு மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடப்பது, தெற்கு பகுத்தறிவு சிந்தனை கொண்டது. கல்வியில் தெற்கு முன்னேறிச் செல்வது, வடக்கு பின்தங்கிக் கிடப்பது. தெற்கின் கலாச்சாரம் நவீனமானது, வடக்கின் கலாச்சாரம் பழமை யானது.

*சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் 1947 ஆகஸ்ட் 15இல் எப்படிபதவி ஏற்றுக் கொண்டார்? காசியிலிருந்து வந்த பார்ப்பனர்கள் யாகம் நடத்தி நாட்டை ஆளப்போகும் பிரதமரிடம் "ராஜ தண்டத்தை"அளித்து பார்ப்பனர் கையிலிருந்த புனித கங்கை நீரை குடித்துத்தானே பதவியை ஏற்றார்?*

*இறந்த கணவனை எரியூட்டிய நெருப்பில் அண்மைக் காலங்களில் எத்தனை பெண்கள் உடன்கட்டை ஏற்றப்பட்டிருக்கிறார்கள்?*

*நமது குடியரசு தலைவர் (ராஜேந்திர பிரசாத்) காசிக்குப் போய் பார்ப்பனர்களின் காலை கழுவி, அந்தத் தண்ணீரை குடிக்க வில்லையா?*

*வடக்கே இன்னும் "சதி" என்னும் உடன்கட்டை ஏறுதல் நடந்து கொண்டு தானே இருக்கிறது?*

*நாகா சாதுக்கள் வன்முறை வெறியாட்டம் நடத்திக் கொண்டுதானே இருக்கிறார்கள். கடந்த ஆண்டு அரித்துவாரா திருவிழாவில் இது நடந்ததே, உபி யிலிருந்து இதை எல்லாம் எவராவது எதிர்த்தார்களா?*

# கழக சார்பில் அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை



**சென்னையில் :** டாக்டர் அம்பேத்கர் 128ஆவது பிறந்தநாளான 14.04.2019 காலை 9 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக அடையாறில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தோழர்களுடன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கழகத் தோழர்கள் ஜாதி, மத எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பினர். தொடர்ந்து, மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதன்பின் இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தில் கழகத் தோழர்கள் ராஜீ, சங்கீதா, அம்பிகா, பூர்ணிமா ஆகியோர் அம்பேத்கர் படத்திற்கும், பெரியார் சிலைக்கும் மாலை அணிவித்து வீரவணக்க முழக்கங்களை எழுப்பினர்.

**திருப்பூரில் :** திருப்பூரில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஜாதி ஒழிப்பு உறுதியேற்பு நிகழ்வாக 14.04.2019 ஞாயிறு காலை 11.00 மணியளவில் மாநகராட்சி எதிரில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலை அருகில் நடைபெற்றது. கழகப் பொருளாளர் துரைசாமி சிலைக்கு மாலை அணிவித்தார். கவிஞர் கனல் மதி ஜாதி ஒழிப்பு உறுதி மொழி கூற தொடர்ந்து தோழர்கள் உறுதி மொழி ஏற்றனர். நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, மாவட்டத் தலைவர் முகில் ராசு, மாவட்ட செயலாளர் நீதிராசன், கழக பொறுப்பாளர்கள் சங்கீதா, தனபால், ராமசாமி, மாதவன், கனல் மதி, கதிர் முகிலன், முத்துலட்சுமி, பரிமளராசன் உள்ளிட்ட 25 பேர் கலந்து கொண்டனர். பெரியார் பிஞ்சுகள் முத்தமிழ், யாழினி ஆகியோர் பிறந்த நாளும் இந்நிகழ்வின் ஊடே கொண்டாடப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன.



**கோவையில் :** கோவையில் புரட்சியாளர் அம்பேத்கரின் 128ஆவது பிறந்த நாளில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் இட்டு மரியாதை செலுத்தினர். இதில் தோழர்கள் நேரு தாசு, வெங்கட், கிருஷ்ணன், சிவலிங்கம், நிர்மல், சுரேஷ், ரஞ்சித், ஜின்னா மச்சு, மாதவன் சங்கர் முற்போக்கு வழக்கறிஞர்கள் தோழர்கள் ரமேஷ், ஜெயப்பிரகாஷ் கலந்து கொண்டனர்.





**மதுரையில் :** திராவிடர் விடுதலை கழக மாவட்ட செயலாளர் மணி அமுதன் தலைமையில் மே 17 இயக்கம் - நாணல் நண்பர்கள் -அம்பேத்கர் எழுச்சி இயக்க தோழர்கள் இணைந்து 1442019 அன்று காலை பெரியார் சிலையிலிருந்து பேரணியாகச் சென்று அவுட் போஸ்ட் அம்பேத்கர் சிலைக்கு மாலையிட்டு ஜாதி ஒழிப்பு உறுதி மொழிகளை முன்னெடுத்தனர்.

**மயிலாடுதுறையில் :** மயிலாடுதுறையில் அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை ஒட்டி திராவிடர் விடுதலைக் கழகம், தமிழர் உரிமை இயக்கம், மக்கள் அரசு கட்சி, மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பு சார்பாக மாலை அணிவித்து ஜாதிக்கு எதிராக உறுதிமொழி ஏற்றனர்.





**காஞ்சிபுரத்தில் :** புரட்சியாளர் அம்பேத்கர் 128ஆவது பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டம் திராவிடர் விடுதலை கழகம் சார்பில் கூடுவாஞ்சேரியில் உள்ள சட்ட மேதை அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு பாசிசத்தை ஒழித்து சனாதனத்தை வேரறுக்க உறுதிமொழி எடுக்கப்பட்டது.

# புல்வாமா தாக்குதல்: இந்திய ஊடகங்கள் கேட்கத் தவறிய கேள்விகள்

அதிகாரபூர்வத் தகவல் தொடர்பைக் குறைத்து, சமூக ஊடகங்களின் மூலம் அதிகார பூர்வமற்ற செய்திகளை அதிகளவில் வெளியிட்டதன் மூலம், பல கேள்விகளுக்குப் மத்திய அரசு விடையளிக்கவில்லை. (‘தி ஸ்க்ரால்’ பத்திரிகையில் கல்பனா சர்மா எழுதிய கட்டுரை)

காஷ்மீரில் உள்ள புல்வாமா என்னும் ஊரில் பிப்ரவரி 14 அன்று நடந்த தற்கொலைப் படை தாக்குதலில், 40 ரிசர்வ் காவல்துறை வீரர்களின் மரணத்தைத் தொடர்ந்து, இந்தியாவில் முக்கியமான ஊடகங்கள், குறிப்பாக தொலைக்காட்சி செய்திகள், இதுவரை எட்டாத உற்சாகத்தையும் பரவசத்தையும் அடைந்துள்ளன.

இது ஆபத்தானதாக இல்லாமல் இருந்தால், வியப்பானது என்று சொல்லி ஒதுக்கிவிடலாம். ஆனால், ஊடகங்களின் இந்தப் போக்கு தேர்தல் காலத்தில் அதீதமான தேசியவாதத்திற்கான தீனியைப் போட்டிருக்கிறது. இந் நிகழ்வின் உடனடி எதிர்வினை என்பது காஷ்மீரிகள் மாணவர்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள் மீதான விஸ்வ இந்து பரிஷத், பஜ்ரங்தள் மற்றும் பிறரின் தாக்குதலாகும்.

வரப்போகும் தேர்தலில் இது முக்கியமாகக் கருதப்படும். ஏற்கெனவே, பாஜக கட்சித் தலைவர் அமித்ஷா உட்பட பலரது வாக்குமூலங்களின் மூலம், புல்வாமா தாக்குதலை முடிந்த வரையில் அவர்கள் தேர்தலுக்குப் பயன்படுத்து வார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

முதலில், புல்வாமாவிலும் பிறகு பிப்ரவரி 26 அன்றும் நடந்த தாக்குதல்களைத் தொடர்ந்து, ஏன் ஊடகங்கள் அடிப்படைக் கேள்விகளைக்கூட கேட்காமல், குறிப்பிட்ட “ஆதாரங்களில்” இருந்து கிடைத்த துண்டுத் தகவல்களை மீண்டும் பெருகச் செய்தன?

எடுத்துக்காட்டாக, புல்வாமா தாக்குதல் நடந்த அன்று, ஊடகங் களுக்கு அந்தப் பகுதியில் அனுமதி மறுக்கப்பட்டது புரிந்து கொள்ளப்படக் கூடியதே. தாக்குதல் நடந்த இடங்களின் தெளிவற்ற படங்களே கிடைத்தன. ஊடகங்கள் பாதுகாப்பு மற்றும் உளவுத் துறையின் பதில்களைச் சார்ந்து இயங்கின.

இருப்பினும், அதிகார பூர்வமான ஒரு சந்திப்பிற்கு முன்பே, ஊடகங்களின் சில பகுதிகளில் வெடிபொருட்களின் அளவு குறித்த செய்திகள் வெளி யாயின. இது 350 கிலோ முதல் 80 கிலோ, 35 கிலோ என்று குறைந்தது. தற்கொலைப் படைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தின் நிறம், அது எங்கே தயாரிக்கப்பட்டது என்பன போன்ற தகவல்களும் வெளியாயின.

தடயவியல் சோதனைகள் செய்யப்படாதபோது, இத்தகவல்கள் எப்படிக் கிடைத்தன? யாருமே இதைக் கேட்க வில்லையா? இத்தகவல்கள் நிச்சயமாக நம்பகமானவையாக இருந்திருக்காது. எனவே, ஆதாரங்கள் கிடைத்து அவை ஆராயப்படுவதற்கு முன்பு இம் மாதிரி செய்திகள் வெளியிடப்படக்கூடாது. ஆனால், முன்பு நடந்தது போலவே, இந்திய ஊடகங்கள் அவநம்பிக்கையை நிலவச் செய்து, ஆராயப்படாத, முரணான, அன்றைய அரசிற்கு ஏற்றதான ஊகிக்கப்பட்ட தகவல்களை வெளியிட் டிருக்கிறது. நம்பகமான ஊடகங்கள், இவ்வகையான ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுவதற்கு முன்பு சற்று யோசித்திருக்கும்.

எதிர்பார்த்தபடியே, பிப்ரவரி 25 அன்று, தடவியல் சோதனைகளுக்குப் பிறகு, பல ஊடகங்கள் சொன்னதுபோல அது விளையாட்டு பயன்பாட்டுக்கான வாகனம் கிடையாது என்றும், மாருதி எக்கோ வேன் என்றும், 30 கிலோவிற்கு அதிகமான வெடி பொருள் அதில் இல்லை யென்றும் தெரிய வந்தது.

மேலும், உளவுத் துறை தோல்வியடைந்துவிட்டது என்று பேசப்பட்ட போதும், ஊடகங்கள் அதுதான் உண்மையா என்று தெரிந்து கொள்ள முற்படவில்லை. எதிர்க்கட்சிகள்கூட, தேசதுரோகிகள் என்று சொல்லப் பட்டு விடுவோமோ என்ற பயத்தில் அமைதியாக இருந்துவிட்டனர். எனவே, புல்வாமா தாக்குதல், டெல்லிக்கு உடல்கள் கொண்டு வரப்படுவது, அதைத் தொடர்ந்து இறுதி சடங்கு சம்பந்தமான சில புகைப்படங் களுடனும் முடிந்து விட்டது. ஏன் குடும்பங்கள் சடங்குகளைச் செய்வ தற்குக் காத்திருக்க வேண்டும் என்ற கேள்வியைக்கூட ஊடகங்கள் கேட்க வில்லை. அதன் பிறகு, பிப்ரவரி 26 அன்று அதிகாலையில், இந்திய விமானப் படை, ஜைஷ்-இ-முகம்மதின் பயிற்சி முகாம் இருப்பதாகக் கூறப்படும் மலை உச்சியில் 1000 கிலோ வெடி குண்டைப் போட்டதாகச் சொல்லப்படுகிறது.

அன்றைய காலையில், ஒரு விரிவான அதிகாரபூர்வ சந்திப்பு நடத்தப் பட்டது. அதில், கவனமாக எழுதப்பட்ட விஷயங்களை வெளியுறவு செயலாளர், விஜய் கோகலே வாசித்துக் காட்டினார். அதை அவர் வாசித்து முடித்ததும், எந்த கேள்விகளும் அனுமதிக்கப்படவில்லை. அடிப் படையான கேள்வியான, அவர் சொன்ன பாலகோட் என்பது பாகிஸ்தான் கைபர் பக்துன்க்வா மாகாணத்தி லுள்ளதா அல்லது ஜம்மு காஷ்மீர் பூஞ்ச் மாவட்டத்திலுள்ளதா என்ற கேள்விகூட அனுமதிக்கப்படவில்லை.

அதிகாரபூர்வ அறிக்கை எத்தனை பேர் அந்தத் தாக்குதலில் கொல்லப் பட்டனர் என்பதைக்கூடச் சொல்லவில்லை. ஆனாலும் சில மணி நேரங்களில், நம் ஊடகங்கள் 300, 350, ஏன் 600 பேர் கொல்லப் பட்டனர் என்று தெரிவித்தன. அத்தனை பேர் கொல்லப்பட்டிருந்தால், பாகிஸ்தான் அமைதியாக இருந்திருக்குமா என்பதைக்கூட யாருக்கும் கேட்கத் தோன்றவில்லையா? வானிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் இறந்து போனவர்களின் எண்ணிக்கை எப்படி நம் ஊடகங்களுக்குத் துல்லியமாகத் தெரிந்தது? அது ஒருவேளை தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிக்கும் ஜெய்ஷ் முகாமாக இருந்தால், அங்கு தீவிரவாதிகள், வேலையாட்கள் உட்பட அனைவரும் அங்கே இருந்தனரா? அங்கு உள்ளூர் பொது மக்கள் யாரும் அங்கே வேலையில் இல்லையா? அவர்கள் இறந்து போயிருந்தால், பாலகோட்டைச் சுற்றியுள்ள நகர் மற்றும் கிராமப் புறங்களில் பதற்றம் ஏற்பட்டிருக்காதா? இப்படிப் பல அடிப்படைக் கேள்விகள் உள்ளன.

பிப்ரவரி 27 அன்று, பாகிஸ்தான், இந்திய விமானப் படைகளுக்கு இடையில் நடந்த சிறு போரின்போது இந்திய விமானம் கீழே விழுந்து, விமான ஓட்டுநர், விங் கமாண்டர் அபிநந்தன் வர்த்தமான் பாகிஸ் தானால் பிடிக்கப்பட்டதில் பால்கோட் தாக்குதல் சம்பவம் குறித்த கேள்விகள் காணாமல் போயின. அதீதமான தேசிய பற்றுடன் பேசிக் கொண்டிருந்த செய்தியாளர்களை இந்தச் சம்பவம், சில மணிநேரம் அமைதி அடையச் செய்தது.

பைலட் கைது சம்பந்தமான செய்திகூட, பாகிஸ்தானிடமிருந்துதான் வந்தது. எதிர்பார்த்தபடியே, இந்திய அதிகாரிகள் இதை முதலில் மறுத்தனர், பிறகு, ஒரு சிறிய சந்திப்பில் வெளியுறவுத் துறை பேச்சாளர் ரவீஷ் குமார் இதைத் தெரிவித்தார். ஏர்வைஸ் மார்ஷல் ஆர்.ஜி.கே. கபூர், இச் சந்திப்பின்போது குமாருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த போதி லும் பேசாதது மர்மமாகவே இருக்கிறது.

முந்தைய நாளில் நடந்த சந்திப்பைப் போலவே, எந்தக் கேள்வியும் அனுமதிக்கப்பட வில்லை. மேலும், இந்தியா நடத்திய தாக்குதலுக்கும், பாகிஸ்தானின் எதிர்வினைக்கும் இடையிலான 48 மணிநேரத்தில், பிரதமர் நரேந்திர மோடி உட்பட எந்தவொரு மூத்த அதிகாரியும் அரசின் சார்பில் அதிகாரபூர்வமான செய்தியை வெளியிடவில்லை. மாறாக, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், தொலைக்காட்சி சந்திப்புகளை நடத்தி அமைதிக் கான பேச்சுவார்த்தையில் ஈடு பட்டார்.

வேண்டுமென்றே, அதிகார பூர்வ தகவல் தொடர்பைக் குறைத்து, சமூக ஊடகங்களின் மூலம் அதிகாரபூர்வமற்ற செய்திகளை அதிக அளவில் வெளியிட்டதன் மூலம், பல கேள்விகளுக்கு இந்திய அரசு பதிலளிக்காமல் இருக்கிறது. பொய்யான செய்திகள் அதிக அளவில் பரவும் இந்நேரத்தில், அரசாங்கம் தனது பொறுப்பி லிருந்து பின்வாங்கி, அரை வேக்காட்டுத் தனமான தகவல் களைப் பெயர் குறிப்பிடப்படாத சில “ஆதாரங்களின்” அடிப் படையில் வெளியிடுவது, மன்னிக்கவே முடியாத செயல்.

இந்த கட்டுரையின் தொடக்கத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு வருவோம்: சிக்கலான நேரத்தில் கேள்விகளைக் கேட்டால் ஊடக வியலாளர்கள் தேச துரோகிகள் ஆகிவிடுவார்களா? இதற்கான பதில் இதுதான்: ஏன் ஊடக வியலாளர்கள் தங்கள் “தேசியவாத” அங்கீகாரத்தைப் பற்றி கவலைப்பட வேண்டும்? ஊடகவியலாளர், தன் அரசியல் நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு, சுதந்திரமாகவும், ஆர்வத்துடனும் இருக்க வேண்டும். இதில் அவர் “தேசத்திற்கு” ஆதரவாக இருக்கிறாரா, இல்லை ஆயுதப் படைகளுக்கு ஆதரவாக இருக்கிறாரா என்பது முக்கியமில்லை.

அதீதமான தேசியவாதம் எந்த அளவிற்கு ஊடகங்களைத் தாக்கி யிருக்கிறது என்றால், முதன்மை யான தொலைக்காட்சி செய்தியாளர்கள் இந்திய விமானப் படைக்கான ஆதரவைச் சமூக வலைதளங்களில் தெரிவித்து அதன் மூலம் தங்கள் நிலையை வெளிப்படுத்த முயன்றனர். சுதந்திரமான ஊடகத் துறை இருக்கும் எந்தவொரு ஜனநாயக நாட்டிலும், ஆயுதப் படைகளின் மகிமையைப் பாடுவதோ, “எதிரிகளின்” இரத்தம் குறித்து பேச வேண்டியதோ பத்திரிகையாளரின் வேலை அல்ல. இந்திய ஊடகத் துறை, கட்டுப்பாடே இல்லாத எல்லைக் கோட்டைத் தாண்டி விட்டது என்பதில சந்தேகமில்லை. ●


**தற்போது விற்பனையில்**

**‘நிமிர்வோம்’ – ஏப்ரல் 2019 இதழ்**

**தேர்தல் சிறப்பிதழ் - பல்வேறு கட்டுரைகளுடன்...**




தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745/7299230363 www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

### தலைமைக் கழக அலுவலகத்தைத் தக்க வைத்துக் கொள்ள கட்டமைப்பு நிதி

# கழகத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

திராவிடர் விடுதலைக் கழகத்துக்காக சென்னையில் அமைந்துள்ள தலைமையகத்தை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தை கழகத் தோழர்கள் நன்றாக உணர்வார்கள். கடும் முயற்சி எடுத்து குத்தகைக்கு எடுத்து அந்தத் தலைமை அலுவலகத்தில் கடந்த எட்டு ஆண்டுகளாக இயங்கி வருகிறோம். திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு மட்டுமல்ல; எத்தனையோ சிறிய அமைப்புகள், இயக்கங்கள் தங்களுக்கான கலந்துரை யாடல், சந்திப்புக் கூட்டங்கள் நடத்துவதற்கு ‘தாய் வீடாக’ நமது தலைமைக் கழகம் பயன்பட்டு வருகிறது.

நகரின் மய்யப் பகுதியில் உள்ள அந்த அலுவலகத்தை அதன் உரிமையாளர்கள் விற்பனை செய்ய முடிவெடுத்தபோது தலைமைக் கழகம் இல்லாமல் போய் விடுமே என்ற கவலையும் வருத்தமும் நமக்கு உருவானது. இதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். அதற்காக ஆதரவாளர்கள் நண்பர்களிடம் கட்டமைப்பு நிதி திரட்டும் முயற்சிகளில் இறங்கினோம். பலரும் ஆர்வத்துடன் உதவினார்கள். நட்புக்கரம் நீட்டினார்கள். ஆனாலும் அலுவலக கட்டிடத்தை வாங்கு வதற்கான தொகையில் பாதியளவைக்கூட நம்மால் எட்ட முடியவில்லை.

வீட்டின் உரிமையாளர்கள் சீக்கிரம் பணத்தைக் கொடுத்து முடித்துக் கொள்ளுங்கள் என்று தொடர்ந்து அழுத்தம் தருகிறார்கள். தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், இதில் மிகவும் கவலையும் பொறுப்பையும் ஏற்று இதே பணியாய் தோழர்களிடம் தொடர்ந்து வேண்டுகோள் வைத்து வருவதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம்.

இப்போது தலைமைக் கழகத்தை நாம் தக்க வைத்துக் கொள்வதா ? அல்லது விட்டு விடலாமா என்ற இறுதிக் கட்டத்தில் வந்து நிற்கிறோம்.

கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர், கழக அமைப்புச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள் பலரும் தங்களால் முடிந்த அளவுக்கு நன்கொடை திரட்ட தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் இனியும் இந்தத் திட்டத்தை தாமதப்படுத்த முடியாத நிலைக்கு வந்து சேர்ந்து விட்டோம்.

கடந்த மார்ச் **20, 2018**இல் திருப்பூரில் கூடிய தலைமைக் குழுவில் இது குறித்து நீண்ட நேரம் விவாதித்தோம். இறுதியாக இந்த ‘தலைமைக் கழக’த்தை நாம் தக்க வைத்துக் கொள்வதில் கழகப் பொறுப்பாளர்கள் தோழர்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பையும் உறுதி செய்ய வேண்டும் என்ற தவிர்க்கவியலாத முடிவுக்கு வந்தோம்.

அந்த நோக்கத்தோடு கழகத்தின் பொறுப்பாளர்கள், தோழர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு தோழரும் ரூ.**20,000** குறைந்த அளவு நன்கொடையைத் தாமாகவோ அல்லது திரட்டியோ தர வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட இந்தத் தொகை மிக மிகக் கட்டாயமானது என்றும் கழக தலைமைக் குழு முடிவெடுத்தது. அதற்கு கூடுதலாக நன்கொடை திரட்டித் தந்தால் மிகவும் மகிழ்வுடன் வரவேற்போம்.

பெரியார் இலட்சியத்துக்காக திராவிடர் விடுதலைக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டு செயல்படும் நமது தோழர்கள் ஒவ்வொருவருமே பொது வாழ்க்கையில் நேர்மையோடும் அர்ப்பணிப் போடும் கொள்கை சமரசமின்றி செயல்பட்டு வருவதை அந்தந்தப் பகுதி மக்களும் நண்பர்களும் தோழமை சக்திகளும் மிக நன்றாகவே அறிவார்கள். கழகத்தின் மீதும் கழகத் தோழர்கள் மீதும் உள்ள மரியாதையையும் நம்பிக்கையையும் நமது தோழர்கள் நல்ல வகையில் இந்தக் கட்டமைப்பு நிதி திரட்டலுக்குப் பயன்படுத்த முன் வருவார்கள் என்று நம்புகிறோம்.

மிகக் குறைந்தபட்ச அளவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த ரூ.**20,000**/-க்கான இலக்கை நிச்சயமாக ஒவ்வொரு தோழர்களாலும் செய்து முடிக்க முடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். இந்த இலக்கை எட்ட முடியாமைக்குக் காரணங்களை அடுக்கிக் காட்ட வேண்டாம் என்றும் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம். தோழர்கள் கழகத்துக்காக செலுத்தும் உண்மையான பங்களிப்பை மதிப்பிடும் ஒரு அளவுகோலாகவே இதனைத் தலைமைக் கழகம் கருத்தில் கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

‘கழகக் கட்டமைப்பின் அடிக்கற்கள்’ என்ற பெருமையில் ஒவ்வொரு கழகத் தோழரும் பங்கேற்க முன் வரவேண்டும். முன் வருவீர்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு !

இந்த நிதி திரட்டலுக்கான கெடு மே **15, 2019** ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மேலும் எக்காரணம் கொண்டும் கால நீட்டிப்புத் தர இயலாத நெருக்கடிக்கு நாம் உள்ளாகியுள்ளோம்.

கட்டமைப்பு திரட்டல் பணி முடிந்த அடுத்த வாரமே கழகத்தின் செயலவைக் கூடி நிதி திரட்டிய அனைத்துத் தோழர்களையும் பாராட்டிச் சிறப்பிக்கவும் முடிவு செய்துள்ளோம்.

தலைமைக் கழகத்தைத் தக்க வைக்கும் இந்த அடிப்படைக் கடமையை நிறைவேற்றி முடிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

தோழமையுடன்,

கொளத்தூர் மணி
தலைவர்

விடுதலை இராசேந்திரன்
பொதுச் செயலாளர்

### பிரெஞ்சு நாளேடு அம்பலப்படுத்துகிறது

## ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு இடைத் தரகரா மோடி

ரிலையன்ஸ் நிறுவனம், பிரான்ஸ் அரசிடம் ரூ. 1,124 கோடி வரித் தள்ளுபடி பெற்றிருப்பதன் மூலம், ரபேல் பேரத்தில், அனில் அம்பானிக்கு பிரதமர் மோடி, இடைத்தரகராக செயல்பட்டிருப்பது நிரூபணமாகி இருப்பதாக காங்கிரஸ் தலைமைச் செய்தித் தொடர்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா கூறியுள்ளார். இதுதொடர்பான விவரம் வருமாறு:

இந்தியாவின் பெருமுதலாளிகளில் ஒருவரான அனில் அம்பானி, ‘ரிலையன்ஸ் அட்லாண்டில் பிளாக் பிரான்ஸ்’ எனும் பெயரில் தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்றை, பிரான்சில் நடத்தி வருகிறார். ஆனால், பிரான்ஸ் அரசுக்கு செலுத்த வேண்டிய 151 மில்லியன் யூரோ (சுமார் ரூ. 1182 கோடி) அளவிற்கான வரியை, கடந்த 2007 முதல் 2012ஆம் ஆண்டு வரை அம்பானி செலுத்தாமல் இருந்து வந்துள்ளார்.

ஒரு கட்டத்தில், பிரான்ஸ் அதிகாரிகள் நடத்திய பேச்சு வார்த்தையில், முதற்கட்டமாக 7.3 மில்லியன் யூரோவை (ரூ. 57 கோடி) செலுத்த, ரிலையன்ஸ் நிறுவனம் சம்மதித்துள்ளது. 2014 கால கட்டத்தில் இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன.

இந்நிலையில், கடந்த 2015ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டுக்குப் பயணம் செய்த இந்தியப் பிரதமர் மோடி, அங்கு பிரான்ஸ் நாட்டின் ‘டஸ்ஸால்ட்’ நிறுவனத்திடம் இருந்து பறக்கும் நிலையில், 36 ரபேல் ரக போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டார். ‘டஸ்ஸால்ட்’ நிறுவனத்தின் கூட்டு நிறுவனமாக, அனில் அம்பானியின் ‘ரிலையன்ஸ் டிபென்ஸ்’ சேர்த்துக் கொள்ளப்பட்டது.

பிரான்ஸ் நாட்டிற்கு ரூ. 1182 கோடி வரி பாக்கி வைத்திருந்த, ‘ரிலையன்ஸ் அட்லாண்டில் பிளாக் பிரான்ஸ்’ நிறுவனத்தைத்தான், ‘டஸ்ஸால்ட்’ நிறுவனம் கூட்டு நிறுவனமாக சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, பிரதமர் மோடி பிரான்சிற்கு வந்து சென்றதற்குப் பிறகு, ரிலையன்ஸ் நிறுவனம் செலுத்த வேண்டிய வரிப் பாக்கி ரூ. 1182 கோடியில், ரூ. 57 கோடியை (73 இலட்சம் யூரோ) மட்டும் செலுத்தினால் போதும் என்று கூறிவிட்டு, ரூ. 1,124 கோடியை பிரான்ஸ் அரசு தள்ளுபடி செய்துள்ளது.

பிரான்ஸ் நாட்டின் ‘லீ மாண்டே’ என்றநாளேடு இந்த உண்மையைத் தற்போது வெளிக் கொண்டு வந்துள்ளது. இது இந்தியாவில் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சியின் தலைமைச் செய்தித் தொடர்பாளர் ரன்தீப்சிங் சுர்ஜேவாலா பேட்டி ஒன்றை அளித்துள்ளார். அதில், “ரபேல் பேரத்தில் தொழிலதிபர் அனில் அம்பானிக்கு இடைத்தரகராக பிரதமர் நரேந்திர மோடி செயல்பட்டார் என்பது இப்போது தெளிவாகி விட்டது” என கூறியுள்ளார்.

“இதேபோல வேறு எந்தெந்த நிறுவனங்களெல்லாம் வரித் தள்ளுபடி பெற்றனவோ?” என்றும் சந்தேகம் எழுப்பியுள்ள சுர்ஜேவாலா, “காவலாளி திருடனாகி விட்டார்” என்பது உண்மையாகி இருப்பதாகவும், மோடியின் ஆசி உள்ளவர்கள் எதையும் அடைய முடியும்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இந்த செய்திகளை, ரிலையன்ஸ் கம்யூனிகேஷன் நிறுவனம் மட்டுமன்றி, மோடி அரசும் வழக்கம்போல மறுத்து மழுப்பியுள்ளன.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th April 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN